**தேதி :** 05.11.2025 **SC.No. :** 71/2020 **PW :9** Dr. மோகன்தாஸ்

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்னுடைய மருத்துவமனைக்கு காயம்பட்டவர் வரும்போது, காயத்தில் தையல் போடப்பட்டிருந்ததா? என்றால் முதலுதவி அளிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய வலது மணிக்கட்டில் தையல் போடப்பட்டிருந்தது. தையல் போடப்பட்டிருந்ததினால், அந்த காயத்தின் தன்மை என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். நான் வழங்கிய அ.சா.ஆ.3 அறிக்கையில் 1வது காயத்தின் அளவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தாக்கியதாக காயம்பட்டவர் சொன்னதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த வகையான ஆயுதத்தால் தாக்கப்பட்டதாக காயம்பட்ட நபர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கூர்மையான ஆயுதம் என்று தான் சொல்லியுள்ளார். ஆய்வாளர் என்னிடம் ஆயுதத்தை காண்பித்து கருத்துரு பெறவில்லை என்றால் சரிதான். அந்த ஆயுதத்தை காண்பித்தால், அந்த ஆயுதத்தினால் காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதா, என்று என்னால் சொல்ல முடியும் என்றால் சரிதான்.

முதலுதவி சிகிச்சை எடுக்கப்பட்டதற்கான ஆவணங்களை காயம்பட்டவர் என்னிடம் ஒப்படைக்கவில்லை. 1, 2 காயங்கள் பலமுறை

வெட்டும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயங்கள் குணமான பிறகு நான் டிஸ்சார்ஜ் செய்தேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி நாகர்கோவில் முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. D.Sahayarani, Typist, முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகர்கோவில் நீதிமன்றத்தில் இந்த திறந்த நீதிமன்ற்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.05 15:21:36 +0530